**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions
} CC.No.389/2009

Deposition Of Witness for
{ Prosecution PW 4
Defense
Court

Name ஜெகன்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of December 2021.

நான் உன்னாங்குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து அ.சா.ஆ. 2 ஆகும். யாரிடம் எப்போது எதற்காக போட்டு கொடுத்தேன் என தெரியாது. வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. வழக்கு பற்றி போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

29.04.2009 ம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவ இடமான கல்லத்தி பாலத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் மூலைக்கரைப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**C.C 389/2009**
**Date 17.12.2021**
**PW : 2**
**பெயர் - முத்துராஜ்**

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கின் எதிரிகள் பைக்கில் சென்று இடித்து விபத்து ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு நேரடியாக இந்த சம்பவத்தை பற்றி தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டு கொண்டதால் முதல்விசாரணையில் சாட்சியம் அளித்தீற்கள் என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை**